# திருப்பூர் முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

ந.க. எண்.8282/இ2/2020 நாள் 15.12.2020

பொருள் தமிழ் வளர்ச்சி – திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசு – 1330 குறட்பாக்களையும் முற்றோதல் செய்யும் மாணாக்கர்களுக்குப் பாராட்டுப் பரிசுத் தொகை ரூ.10,000/– வழங்குதல் – மாணவ / மாணவியர்கள் கலந்துகொள்ள அறிவுரை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை திருப்பூர் மாவட்டம், தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 102/2020 நாள் 14.12.2020.

---

பார்வையில் கண்டுள்ள, திருப்பூர் மாவட்டம், தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அவர்களின் கடிதத்தில், திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசுத் திட்டத்தின்படி, 1330 குறட்பாக்களையும் மனனம் செய்து ஒப்பிக்கும் பள்ளி மாணவ / மாணவியர்களுக்குத் தலா ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) ரொக்கப் பரிசாக தமிழ் வளர்ச்சித் துறையால் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது எனவும், இத்திட்டத்தின்கீழ் மாணவ / மாணவியர்கள் பயன்பெறும் வகையில் அனைத்துப் பள்ளிகளுக்கும் அறிவுறுத்திடத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காண் விபரத்தினை தங்கள் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு தெரிவித்து, திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசுத் திட்டத்தின்படி, மாணவ / மாணவியர்கள் பயன்பெறும் வகையில் 1330 குறட்பாக்களையும் ஒப்பிக்கும் திறனுடைய மாணவ / மாணவியர்கள் இருப்பின், **தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், திருப்பூர்** எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ விண்ணப்பிக்க தக்க அறிவுரைகள் வழங்குமாறு திருப்பூர் மாவட்டத்திலுள்ள அனைத்துவகைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் மற்றும் வட்டாரக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் தங்கள் பள்ளி மாணாக்கர்கள் கலந்து கொண்டமைக்கான விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும் தெரிவிக்கலாகிறது.

15/12/2020

முதன்மைக் கல்வி அலுவலர்,
திருப்பூர்.

15/12/2020

பெறுநர்

1. தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள், அனைத்துவகைப் பள்ளிகள், திருப்பூர் மாவட்டம்.
2. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், திருப்பூர் மாவட்டம்.

நகல் : மாவட்டக்கல்வி அலுவலர்கள் – திருப்பூர் / பல்லடம் / தாராபுரம் / உடுமலைப்பேட்டை கல்வி மாவட்டங்கள், திருப்பூர் மாவட்டம் – தொடர் நடவடிக்கையின்பொருட்டு அனுப்பலாகிறது.

நகல் : தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், திருப்பூர் மாவட்டம் – அவர்களுக்கு கனிவுடன் அனுப்பப்படுகிறது.

SHOT ON REDMI 7
AI DUAL CAMERA

1300599136

8282/2020

தமிழ்வளர்ச்சித் துறை

அனுப்புநர்

முனைவர் ப. அன்புச்செழியன், எம்.ஏ., எம்.பில்., பிஎட்., பிஎச்.டி.,
தமிழ்வளர்ச்சித் துணை இயக்குநர் (பொ),
தமிழ்வளர்ச்சித் துணை இயக்குநர் அலுவலகம்,
மாவட்ட ஆட்சியரகம், திருப்பூர் மாவட்டம்.

பெறுநர்

முதன்மை கல்வி அலுவலர்,
முதன்மை கல்வி அலுவலகம்,
திருப்பூர் மாவட்டம்

15.12.2020

திருவள்ளுவராண்டு 2051 / சார்வரி / கார்த்திகை -
ந.க.எண். 102 / 2020, நாள்:

ஐயா,

பொருள்: தமிழ் வளர்ச்சி - திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசு - 1330 குறட்பாக்களையும் முற்றோதல் செய்யும் மாணவர்களுக்குப் பாராட்டுப் பரிசுத்தொகை ரூ.10,000/- வழங்குதல் - தொடர்பாக.

1 5 DEC 2020

திருப்பூர் - 641604

......

"திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசுத்" திட்டத்தின்படி 1330 குறட்பாக்களையும் மனனம் செய்து ஒப்பிக்கும் பள்ளி மாணவ / மாணவியர்களுக்குத் தலா ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) ரொக்கப் பரிசாகத் தமிழ்வளர்ச்சித் துறையால் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்விவரத்தினை அனைத்துப் பள்ளிகளுக்கும் தெரியப்படுத்தி, இத்திட்டத்தின்கீழ் மாணவ / மாணவியர்கள் பயன்பெறும் வகையில் 1330 குறட்பாக்களையும் ஒப்பிக்கும் திறனுடைய மாணவ / மாணவியர்கள் இருப்பின் தமிழ்வளர்ச்சித் துணை இயக்குநர் அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், திருப்பூர் எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாக விண்ணப்பிக்க அறிவுறுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இணைப்பு : விண்ணப்பப் படிவம்

தமிழ்வளர்ச்சித் துணை இயக்குநர் (பொ)
திருப்பூர் மாவட்டம்.

SHOT ON REDMI 7
AI DUAL CAMERA